## ஒரு பார்வை - பகுதி 1

**பத்ர் போரின் நிகழ்வுகள் விளக்கப்பட்டுள்ளது. மலக்குகளின் உதவியை அல்லாஹ் வழங்கினான். எதிரிகளின் சதிகளை முறியடித்து அல்லாஹ்வின் திட்டம் வெற்றி பெறுகிறது. முஸ்லிம்களின் வெற்றியும், காஃபிர்களின் தோல்வியும் உறுதி செய்யப்பட்டது.**

## தராவிஹ் - 8: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 8, அல்அன்ஃபால்; வசனம்: 1 - 37; பிரிவு: 1 - 4

*பின்னணி: இந்த ஸூரா, பத்ர் யுத்தம் முடிந்த பின் இறக்கப்பட்டது. இது தான் முஸ்லிம்களுக்கும் மக்கத்து குரைஷிகளுக்கும் நடந்த முதல் போர்.*

*இதன் பின்னணி, ஷாம் தேசத்திலிருந்து மக்காவை நோக்கிச் சென்று கொண்டிருந்த குரைஷியரின் வியாபாரக் குழுவை கண்காணிக்குமாறு நபி (ஸல்) அவர்கள் சில ஸஹாபக்களைப் பணித்தார்கள்.*

*இந்த வியாபாரக் குழுவுக்கு தலைமை தாங்கியவர் "அபூஸுப்யான்" இவர் 50,000 தினார் மதிப்புள்ள பொருட்கள் மற்றும் 30-40 பேருடன் வந்துகொண்டிருந்தார். முஸ்லிம்களின் கண்காணிப்பை தெரிந்துகொண்ட அபூஸுப்யான், பாதுகாப்பு உதவிகோரி குரைஷியரிடம் தூது அனுப்பி இருந்தார். இதை அறிந்த குரைஷிகள் 1000 பேர்களுடன் போர் புரிவதற்கு மக்காவிருந்து மதினாவை நோக்கி வந்தனர். அவர்களில் 600 பேர் போர் கவசம் அணிந்திருந்தனர்.*

*இதற்கிடையில், நபி (ஸல்) வியாபாரக் குழுவை தாக்கும் நோக்கில், சுமார் 310 படை வீரர்களுடனும், 70 ஒட்டகங்களுடனும் சென்றார்கள். (அவற்றில் 60 ஒட்டகங்கள் மட்டுமே போர்க்கானவை. ) வழியில் பத்ர் இடத்தை அடைந்தபோது, குரைஷி படைகள் பத்ரை நோக்கி வருவதை அறிந்தார்கள்.*

*நபி (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களிடம், ‘குரைஷிகளுடன் போரிடவா அல்லது வியாபாரக் குழுவை எதிர்கொள்ளவா?’ என ஆலோசனை கேட்டார்கள். அதற்கு அவர்கள், ‘நபியே! நீங்களும் உங்கள் இறைவனும் அதை தீர்மானியுங்கள். நாங்கள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து, உங்களுடன் சேர்ந்து எங்களது கடைசி மூச்சுவரை போர் புரிவோம்’ என்றனர். இதை கேட்ட நபி (ஸல்) மிகுந்த மகிழ்ச்சிக்கொண்டார்கள். அவர்களது முகம் சந்திரனைப்போல் மின்னியது. நபி (ஸல்) குரைஷிகளின் படையை எதிர்கொள்ளத் தீர்மானித்து, மறுநாள் செல்ல திட்டமிட்டார்கள். இப்போர் இஸ்லாமிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.*

*அல்லாஹ்வின் உதவி இப்போரில் மிகத் தெளிவாக தெரிந்தது. நபி (ஸல்) பெரு வெற்றி பெற்றார்கள்.*

1. **(நபியே!) உம் இறைவன் உம்மை சத்தியத்துக்காக போரிட கூறியபோது, முஃமின்களில் ஒரு பிரிவினர் உம்முடன் வர தயங்கினர். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 1)**

2. **எதிரிகளின் இரு கூட்டங்களில் ஒன்று, நிச்சயமாக உங்களுடைய வெற்றிக்கு உரியது என்று அல்லாஹ் உங்களுக்கு வாக்களித்த சமயத்தில், நீங்கள் அவ்விரண்டில் பலமில்லாத வர்த்தகக் கூட்டம் உங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று விரும்பினீர்கள். எனினும் அல்லாஹ்வோ தன் வாக்கின்படி உண்மையை நிலைநாட்டி, நிராகரிப்போரை வேரறுக்கவே நாடினான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 1)**

3. **நபி (ஸல்) அவர்கள் போரில் உதவுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தித்த போது, “அணியணியாக உங்களை பின்தொடர்ந்து வரக்கூடிய ஓராயிரம் வானவர்களைக் கொண்டு, நான் உங்களுக்கு உதவி செய்வேன்” என்று அவன் பதிலளித்தான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 1)**

4. இது உங்களுக்கு ஒரு நற்செய்தி. இதன் மூலம் அவன் உங்கள் இதயங்களை திருப்தியடையச் செய்தான். வெற்றி அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கும். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 1)

5. அல்லாஹ், பத்ர் யுத்தத்திற்கு முன்பு, இறை நம்பிக்கையாளர்கள் சாந்தி அடைந்தவர்களாக, அவர்களுக்கு சிறிய தூக்கத்தைக் கொடுத்தான். அவர்கள் உடம்பை சுத்தப்படுத்தவும், அவர்களை விட்டு ஷைத்தானுடைய அசுத்தத்தைப் போக்கவும், அவர்களின் இதயத்தை பலப்படுத்தி, பாதங்களை உறுதியாக்கவும் வானத்திலிருந்து மழையை பொழியச் செய்தான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 2)

6. இறைவன் வானவர்களை நோக்கி, "நிச்சயமாக நான் உங்களுடன் இருக்கிறேன். நீங்கள் விசுவாசிகளை உறுதிப்படுத்துங்கள்" என கட்டளையிட்டான். நிராகரிப்போருடைய இருதயங்களில் அல்லாஹ் அச்சத்தை ஏற்படுத்தினான். ஆகவே, "அவர்களுடைய பிடரிகளின் மேல் வெட்டுங்கள், அவர்களின் மூட்டுக்கள் ஒவ்வொன்றையும் துண்டித்து விடுங்கள்" என்று வானவர்களுக்கு அறிவித்தான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 2)

7. போரில் எதிரிகளை, விசுவாசிகள் வீழ்த்தவில்லை. மாறாக, அல்லாஹ்தான் அவர்களை வீழ்த்தினான். (நபியே!) பகைவர்கள் மீது மண்ணை நீர் வீசி எறிந்தபோது, நீர் எறியவில்லை; மாறாக, அல்லாஹ்தான் எறிந்தான். விசுவாசிகளை அழகான முறையில் சோதிப்பதற்காகவே இவ்வாறு செய்தான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 2)

8. "நீங்கள் பூமியில் சிறுபான்மையினராகவும், ஒடுக்கப்பட்டவர்களாகவும் இருந்தீர்கள். மக்கள் உங்களை சூரையாடிவிடுவார்கள் என்று நீங்கள்

அஞ்சிக்கொண்டிருந்தீர்கள். அப்போது, அவன் உங்களுக்கு அபயமளித்து, தனது உதவியால் உங்களைப் பலப்படுத்தி, பரிசுத்தமானவற்றை வாழ்வாதாரமாக வழங்கினான். இவற்றை நினைவு கூர்ந்து (அவனுக்கு) நீங்கள் நன்றி செலுத்துவீர்களாக!" (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 3)

9. நபியை சிறை வைக்கவோ அல்லது கொலை செய்யவோ அல்லது ஊரை விட்டு விரட்டவோ, நிராகரிப்பாளர்கள் சூழ்ச்சி செய்தனர். ஆனால் அல்லாஹ், அவர்களின் சூழ்ச்சியை முறியடித்தான். சூழ்ச்சி செய்வோருக்கெல்லாம் அவன் மிக மேலானவன். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 4)

10. அல்லாஹ்வின் பாதையை விட்டும் மக்களைத் தடுப்பதற்காக அவர்கள் தங்கள் செல்வங்களை செலவு செய்கின்றனர். அதுவே அவர்களுக்கு பேரிழப்பாக அமைந்துவிடும். பின்னர் அவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள். இறுதியில் இத்தகைய நிராகரிப்பவர்கள் நரகத்தில் ஒன்று சேர்க்கப்படுவார்கள். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 4)

## ஒரு பார்வை - பகுதி 2

**போருக்கு முன் முஃமின்களை ஊக்குவிப்பதற்காக அல்லாஹ் எதிரிகளின் எண்ணிக்கையை குறைத்து காட்டினான். ஷைத்தானின் சூழ்ச்சியை அல்லாஹ் எச்சரிக்கிறான். இந்தப் பிரிவு ஒற்றுமை, பொறுமை மற்றும் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிதல் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்துகிறது. மேலும் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்காவிட்டால், குழப்பம் ஏற்படும் என்று எச்சரிக்கிறது.**

## தராவிஹ் - 8: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 8, அல்அன்ஃபால்; வசனம்: 38 - 75; பிரிவு: 5 - 10

1. **நபி (ஸல்) அவர்களின் கனவில் அல்லாஹ் எதிரிகளின் எண்ணிக்கையை குறைத்து காண்பித்து, அவர்களை தைரியம் இழக்காமல் இருக்கச் செய்தான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 5)**

2. **அவர்களை நபிக்கு அதிகமாகக் காண்பித்திருந்தால், மக்கள் தைரியம் இழந்து, போர் செய்வது பற்றிய முடிவில் ஒருவருக்கொருவர் தர்க்கம் செய்து கொண்டிருந்திருப்பார்கள் என்பதையும் அல்லாஹ் நினைவு கூறுகிறான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 5)**

3. **விசுவாசிகளே! நீங்கள் களத்தில் எதிரியின் அணியைச் சந்திக்க நேர்ந்தால், உறுதியாக எதிர்த்து நில்லுங்கள். அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுங்கள். நீங்கள் வெற்றி அடைவீர்கள். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 6)**

4. **அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் சச்சரவு செய்யாதீர்கள். தைரியமிழந்து விடுவீர்கள். உங்களது வலிமை போய்விடும்.**

ஆகவே, பொறுமையாக இருங்கள். நிச்சயமாக, பொறுமையாளர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 6)

5. ஷைத்தான் நிராகரிப்போர்களுக்கு, அவர்களுடைய செயல்களை அழகாகக் காண்பித்து, அவர்களுக்கு பத்ர் போரில், தான் உதவுவதாகக் கூறினான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 6)

6. ஆனால் போரில் வானவர்கள் விசுவாசிகளுக்கு உதவுவதைக் கண்ட அவன், புறங்காட்டி ஓடிவிட்டான். “நான் உங்களை விட்டு விலகிக் கொள்கிறேன். நீங்கள் பார்க்க முடியாததை நான் பார்க்கின்றேன். நான் அல்லாஹ்வுக்கு பயப்படுகிறேன். அல்லாஹ் தண்டனை கொடுப்பதில் கடுமையானவன்” என்றும் ஷைத்தான் கூறினான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 6)

7. நிராகரிப்போரின் உயிரை வானவர்கள் கைப்பற்றும் சமயத்தில், அவர்களின் முகங்களிலும், முதுகுகளிலும் அடித்து, “சுட்டெரிக்கும் நரக வேதனையை சுவையுங்கள்” என கூறுவர். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 7)

8. எந்தச் சமூகத்தாரும் தங்கள் நிலைமையை மாற்றிக் கொள்ளாத வரையில், நிச்சயமாக அல்லாஹ்வும் அவர்களுக்கு வழங்கிய எந்த அருட்கொடையையும் மாற்றுவதில்லை. (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 7)

9. அல்லாஹ்தான் தன் உதவியாலும், விசுவாசிகளாலும் உம்மை பலப்படுத்தினான். அவன் விசுவாசிகளின் உள்ளங்களை இணைத்தான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 8)

10. பூமியிலுள்ள எல்லா செல்வங்களையும் நீர் செலவிட்டிருந்தாலும், அவர்களுடைய உள்ளங்களை இணைத்திருக்கமுடியாது. எனினும் அல்லாஹ்தான் அவர்களை இணைத்தான். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 8)

11. விசுவாசம் கொண்டு, புலம் பெயர்ந்து சென்று, தம் செல்வங்களாலும், உயிர்களாலும், இறைவழியில்

போரிட்டவர்களும், அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து உதவியவர்களும்தான் ஒத்துழைக்கும் உற்ற நண்பர்கள் ஆவர். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 10)

12. நிராகரிப்பவர்கள் தம்மில் சிலருக்குச் சிலர் ஒத்துழைக்கும் உற்ற நண்பர்கள் ஆவர். ஆகவே, நீங்கள் இவ்வாறு உங்களுக்குள் ஒத்துழைக்கவில்லையென்றால், பூமியில் குழப்பமும், பெருங்கலகமும் ஏற்பட்டு விடும். (ஸூரா - அல்அன்ஃபால்; பிரிவு: 10)

## ஒரு பார்வை - பகுதி 3

**விசுவாசிகள், இணைவைப்போரிடம் முன்னர் செய்து கொண்ட அனைத்து உடன்படிக்கைகளும் செல்லாததாகி விட்டது. இணை வைத்து வணங்குவோர்கள், இனி 4 மாதங்கள் வரையில் மக்காவில் நடமாடலாம். மீறுபவர்கள் அதன் விளைவுகளை சந்திக்க நேரிடும். அதே நேரத்தில், இணைவைப்பாளர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக இல்லாமலிருந்தால், அவர்களின் உடன்படிக்கையை பூர்த்தி செய்யவேண்டும். முஸ்லிம்கள் சத்தியங்களை மீறுபவர்களுக்கு எதிராகவும், இஸ்லாத்தை அவமதிப்பவர்களுக்கு எதிராகவும் போராடுமாறு கட்டளையிடப்படுகிறார்கள். விசுவாசிகள் இணைவைப்பவர்களுடன் நட்புகொள்வதை தவிர்க்க வேண்டும்.**

## தராவிஹ் - 8: (ரக்அத் 9 முதல் 12)

**(ஸூரா - அத்தவ்பா; இங்கு ஆரம்பத்தில் 'பிஸ்மில்லாஹ்' கூறுவதில்லை)**

### ஸூரா - 9, அத்தவ்பா; வசனம்: 1 - 31; பிரிவு: 1 - 5

**(இந்த ஸூரா ஹிஜிரி 9ஆம் ஆண்டு, மக்கா வெற்றிக்குப் பின் அருளப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் அரபு நாடுகள் எல்லாம் முஸ்லிம்களின் ஆட்சியின்கீழ் வந்துகொண்டிருந்தன. இஸ்லாமிய ஆட்சியில் பின்பற்றப்படவேண்டிய கோட்பாடுகளும் சட்ட திட்டங்களும் இந்த ஸூராவின் முதல் 5 பகுதிகளில் கூறப்பட்டுள்ளது).**

1. **விசுவாசிகள், இணைவைப்போரிடம் முன்னர் செய்து கொண்ட அனைத்து உடன்படிக்கைகளும் செல்லாததாகி விட்டது. (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 1)**

2. **இணை வைத்து வணங்குவோர்கள், இனி 4 மாதங்கள் வரையில் மக்காவின் பூமியில் நடமாடலாம். நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வை செயலிழக்கச் செய்யமுடியாது**

என்பதையும், அவர்களுக்கு இழிவுதான் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 1)

3. எனினும், எந்த இணைவைப்பாளர்கள் தங்களின் உடன்படிக்கையை மீறாமல், முஸ்லிம்களுக்கு எதிராக மற்றவர்களுக்கு உதவி செய்யாமல் இருக்கிறார்களோ, அவர்களின் உடன்படிக்கையை பூர்த்தி செய்யுங்கள். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 1)

4. இணைவைப்பவர்கள் யாரேனும் உம்மிடம் அடைக்கலம் கோரினால், அவர் அல்லாஹ்வுடைய வசனங்களை செவியுறும் வாய்ப்பைப் பெறுகின்ற வரை அவருக்கு அடைக்கலம் அளியுங்கள். அதன் பின்பு அவரை பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டுபோய்ச் சேருங்கள். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 1)

5. அவர்கள் தம் உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டார்கள். உங்களுடைய மார்க்கத்தை குறை சொல்லி கொண்டு இருக்கிறார்கள். நம் தூதரை ஊரைவிட்டு வெளியேற்றவும் திட்டமிட்டார்கள். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 2)

6. அவர்களுக்கா நீங்கள் அஞ்சுகிறீர்கள்? உண்மையில், அல்லாஹ் ஒருவனே நீங்கள் அஞ்சுவதற்கு மிகவும் தகுதியானவன். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 2)

7. அவர்களுடன் போர் புரியுங்கள். அல்லாஹ் உங்கள் கரங்களால் அவர்களை வேதனை செய்வான். உங்களுக்கு வெற்றியைக் கொடுப்பான். விசுவாசிகளின் இதயங்களுக்கு நிவாரணம் அளிப்பான். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 2)

8. அல்லாஹ்வுடைய சோதனையிலிருந்து நீங்கள் தப்பிவிடலாம் என எண்ணிக் கொண்டீர்களா? இறைவழியில் போரிடுவோர் உங்களில் யார்? எதிரிகளை நண்பர்களாக்கிக் கொண்டோர் யார் என்பதை அல்லாஹ் நிச்சயமாக பரிசோதிப்பான். அவன் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவனாகவே இருக்கிறான். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 2)

9. உங்களுடைய பெற்றோர்களும் சகோதரர்களும் விசுவாசத்தை விட்டு நிராகரிப்பை விரும்பினால், நீங்கள் அவர்களை உங்கள் பாதுகாவலர்களாக எடுத்துக் கொள்ள வேண்டாம். பாவம் புரியும் கூட்டத்தாரை அல்லாஹ் நல்வழியில் செலுத்துவதில்லை. (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 3)

10. இணைவைப்பாளர்கள் இந்த வருடத்திற்குப் பின் (அதாவது ஹிஜ்ரி 9வது வருடத்துக்குப்பின்) (மஸ்ஜிதுல் ஹராமை) - புனித பள்ளிவாசலை நெருங்க வேண்டாம். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 4)

11. யூதர்கள் நபி உஜைரை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகிறார்கள். கிறிஸ்தவர்கள் நபி ஈஸா மஸீஹை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகிறார்கள். இவர்களுக்கு முன்னிருந்த நிராகரிப்போரின் கூற்றுக்கு இவர்கள் ஒத்துப்போகிறார்கள். அல்லாஹ் அவர்களை அழிப்பானாக! அவர்கள் எவ்வாறு திசை திருப்பப்படுகிறார்கள் என பாருங்கள். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 5)

12. அவர்கள் அல்லாஹ்வை விட்டும் தம் சமய அறிஞர்களையும், துறவிகளையும் மர்யமுடைய மகனாகிய மஸீஹையும் தெய்வங்களாக்கிக் கொள்கின்றனர். ஆனால் ஒரே இறைவனைத் தவிர, வேறெவரையும் வணங்கக்கூடாதென்றே வேதத்தின் மூலம் அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 5)

13. சமய அறிஞர்கள், துறவிகள் ஆகியோரில் அநேகர், மக்களின் செல்வங்களைத் தவறான முறையில் உண்ணுகின்றனர். அல்லாஹ்வுடைய வழியிலிருந்து மக்களைத் தடுக்கின்றனர். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 5)

14. அவர்கள் இறைவழியில் செலவு செய்யாமல், பொன்னையும், வெள்ளியையும் திரட்டி வைத்துள்ளனர். அந்நாளில் அவை நரக நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அவற்றால், அவர்களுடைய நெற்றிகளிலும், விலாக்களிலும், முதுகுகளிலும் சூடு இடப்படும். “நீங்கள் திரட்டி வைத்தவற்றை சுவைத்துப் பாருங்கள்” எனக் கூறப்படும். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 5)

15. **நிச்சயமாக அல்லாஹ்விடம் மாதங்களின் எண்ணிக்கை 12. அவற்றில் 4 மாதங்கள் சிறப்புமிக்கவை.** (அவை: **ரஜப், துல்காயிதா, துல்ஹஜ், முஹர்ரம்**). (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 5)

16. **அம்மாதங்களில் உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள். ஆனால், இணை வைப்பவர்கள் இம்மாதங்களில் உங்களுடன் போருக்கு வந்தால், அவர்களுடன் நீங்கள் போர் புரியுங்கள்.** (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 5)

## ஒரு பார்வை - பகுதி 4

**இறைநம்பிக்கையாளர்கள் இவ்வுலக சுகங்களை பற்றிக்கொள்ளாமல், அல்லாஹ்வின் பாதையில் புறப்படுங்கள். மறுமை வாழ்வு இவ்வுலகை விட மேலானது. நபி (ஸல்) மற்றும் அபூபக்கர் (ரலி) இருவரும் குகையில் இருந்த சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது. விசுவாசிகள் அல்லாஹ்வின் பாதையில் தர்மம் செய்யவும், எதிரிகளின் சூழ்ச்சியை தவிர்க்கவும் வலியுறுத்தப்படுகிறார்கள். யார் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் எதிராக நடந்துகொள்கிறார்களோ, அவர்கள் நரக நெருப்பில் நிரந்தரமாக இருப்பார்கள்.**

## தராவிஹ் - 8: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 9, அத்தவ்பா; வசனம்: 38 - 61; பிரிவு: 6 - 8

**பின்னணி:**

**இந்த வசனத்திலிருந்து இந்த ஸூரா இறுதிவரை ஹிஜ்ரி 9ஆம் ஆண்டு நடந்த தபூக் போர் தொடர்பான விஷயங்களை அல்லாஹ் குறிப்பிடுகின்றான். தபூக் போருக்காக முஸ்லிம்கள் மதீனாவிலிருந்து புறப்பட்டு பைசன்டைன் என்ற ரோமானிய வல்லரசு படையை எதிர்கொள்ள சென்றனர். கடுமையான வெப்ப காலத்தில் நடந்த இந்தப் போர் 'சிரமகாலப் போர்' என வர்ணிக்கப்படுகிறது. முஸ்லிம் படைகள் சுமார் 30,000 பேர், நபி (ஸல்) தலைமையில் சென்றனர். இதற்காக சுமார் 700 கி.மீ தொலைவுக்கு வடக்கு சவூதி அரேபியா வரை பயணம் செல்ல நேர்ந்தது. பேரீச்சம்பழம் அறுவடை காலம். மிக கடுமையான வெப்பம் மற்றும் தண்ணீர் தட்டுப்பாடுகளுக்கு இடையில் அவர்கள் புறப்பட்டு சென்றனர். அந்த நேரத்தில், அவர்கள் ஒரு பேரீச்சம் பழத்தை இருவர் பங்கிட்டு உண்டனர். ஒட்டக வயிற்றில் இருந்து தண்ணீர் பருகினர். ஆனால் ரோமானிய படை போரை சந்திக்காமல் சிதறி ஓடியது. ஆதலால், முஸ்லிம்கள் போர் இல்லாமல் திரும்பிவிட்டனர். இதன் மூலம், முஸ்லிம்களின் செல்வாக்கு வடக்கு சவூதி**

அரேபியாவில் ரோமானியப் பேரரசை நோக்கி நிலைநிறுத்தப்பட்டது.

1. இறைநம்பிக்கை கொண்டோரே! உங்களுக்கு என்ன நேர்ந்தது? “அல்லாஹ்வின் பாதையில் புறப்படுங்கள்” என்று உங்களுக்குக் கூறப்பட்டால், நீங்கள் இவ்வுலக (சுக)த்தின் பக்கம் சாய்ந்து விடுகிறீர்களே! மறுமையைவிட இவ்வுலக வாழ்க்கையைக் கொண்டே நீங்கள் திருப்தியடைந்து விட்டீர்களா? (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 6)

2. மறுமையின் வாழ்க்கைக்கு முன்பு இவ்வுலக வாழ்க்கையின் இன்பம் மிகவும் அற்பமானது. (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 6)

3. ஏக இறையை மறுத்தோர், நபி (ஸல்) அவர்களை ஊரைவிட்டு வெளியேற்றிய போதும், அவர்கள் தோழர் அபுபக்கர் (ரலி) அவர்களுடன் குகையில் இருந்தபோதும் அல்லாஹ் உதவி புரிந்தான். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 6)

4. எதிரிகள் அவர்களைத் தேடி குகையின் வாசலுக்கே வந்தபோதும் சிலந்தி வலையைக் கொண்டு அல்லாஹ் அவர்களை மறைத்து காப்பாற்றினான். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 6)

5. எளிதாக இருந்தாலும் சரி, சுமையாக இருந்தாலும் சரி, நீங்கள் அறப்போருக்குப் புறப்படுங்கள். உங்கள் உயிர்களாலும், உடமைகளாலும் அல்லாஹ்வின் வழியில் அறப்போர் புரியுங்கள். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 6)

6. அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள், தங்கள் உயிர்களாலும், உடமைகளாலும் அறப்போர் புரியாமல் இருந்துவிட உம்மிடம் அனுமதி கோரமாட்டார்கள். பயபக்தியுடையவர்களை அல்லாஹ் நன்கு அறிவான். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 7)

7. (தபூக் போரின்போது) "போரில் கலந்து கொள்ளாமலிருக்க எனக்கு அனுமதி கொடுங்கள். என்னை சோதனைக்கு

உள்ளாக்காதீர்கள்” என்று சொல்வோரும் அவர்களிடையே இருந்தார்கள். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 7)

8. இதோ, அவர்கள் இப்போதே சோதனையில் வீழ்ந்துவிட்டனர். நிச்சயமாக நரகம் இறைமறுப்பாளர்களை சுற்றிவளைத்துக் கொள்ளும். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 7)

9. நபியே, கூறுவீர்!: “அல்லாஹ் எங்களுக்கு எழுதிவைத்ததைத் தவிர வேறு எதுவும் எங்களை ஒருபோதும் அணுகாது. அவனே எங்கள் பொறுப்பாளன்”. போரில் எங்களுக்கு வெற்றி அல்லது வீரமரணம் ஆகிய இரண்டு நன்மைகளில் ஒன்றைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்கமுடியாது. (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 7)

10. அவர்களின் செல்வங்களும், பிள்ளைகளும் உம்மை வியப்பில் ஆழ்த்திவிட வேண்டாம். அல்லாஹ் அவைகளைக் கொண்டே, அவர்களை இவ்வுலகில் தண்டிக்கிறான். அவர்கள் இறைமறுப்பாளர்களாகவே இறப்பார்கள். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 7)

11. ஜகாத், தர்மங்கள் யாவும், வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், அதன் பணியாளர்களுக்கும், உள்ளங்கள் தேற்றப்படவேண்டிய புதியவர்களுக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்கும், கடனாளிகளுக்கும், இறைவழியில் போர் புரிவோருக்கும், வழிப்போக்கர்களுக்கும் மட்டுமே உரியவையாகும். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 8)

12. யார் அல்லாஹ்வுடைய தூதரைத் துன்புறுத்துகின்றனரோ, அவர்களுக்கு வதைக்கும் வேதனைதான் கிடைக்கும். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 8)

13. யார் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் எதிராக நடந்துகொள்கிறார்களோ, அவர்கள் நரக நெருப்பில் நிரந்தரமாக இருப்பார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாதா? அதுவே மாபெரும் இழிவாகும். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 8)

## ஒரு பார்வை - பகுதி 5

**உண்மையான விசுவாசிகள் ஒருவரையொருவர் ஆதரிப்பார்கள். ஒருவரையொருவர் நன்மை செய்வதற்கும், அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் கீழ்படிந்து நடப்பதற்கும் ஊக்குவிப்பார்கள். நயவஞ்சகர்களுக்கு செல்வங்கள் கிடைக்கும்போது தர்மம் செய்வதாக வாக்குறுதிகள் அளிக்கிறார்கள். ஆனால் அவர்கள் வாக்குறுதிகளின்படி நடப்பதில்லை. தபூக் போருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போது நயவஞ்சகர்களின் செயல்கள் மற்றும் அவர்களுக்கு எதிராக அனுப்பப்பட்ட தீர்ப்புகள் பற்றி நினைவூட்டப்படுகிறது.**

## தராவிஹ் - 8: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 9, அத்தவ்பா; வசனம்: 62 - 93; பிரிவு: 9 - 12

1. **இறைநம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும், தங்களுக்குள் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக ஆவர். அவர்கள் நன்மையைச் செய்யுமாறு ஏவுகிறார்கள்; தீமையிலிருந்து மக்களைத் தடுக்கிறார்கள். தொழுகையைக் கடைப்பிடிக்கிறார்கள். ஜகாத்தை வழங்குகிறார்கள். அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 9)**

2. **அவர்களுக்கு சொர்க்கச் சோலைகள் கிடைக்கும் என அல்லாஹ் வாக்களித்துள்ளான். அங்கு நீரருவிகள் எப்போதும் ஓடிக் கொண்டிருக்கும். அவர்கள் அங்கேயே நிரந்தரமாக தங்கி இருப்பார்கள். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 9)**

3. **இவை அனைத்தையும் விட அல்லாஹ்வின் திருப்பொருத்தமே மிகப்பெரியது. அதுவே மகத்தான வெற்றியும் ஆகும். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 9)**

4. **நயவஞ்சகர்கள் அல்லாஹ்விடம் செல்வத்தைக் கேட்டனர். அதன் மூலம் தாங்கள் தர்மம் செய்வோம்; நல்லவர்களாகத் திகழ்வோம் என்றனர். அல்லாஹ் அவர்களுக்குத் தன்**

அருட்கொடையை அளித்த போது, அவர்கள் கஞ்சத்தனம் செய்து, தங்கள் வாக்குறுதியை மீறினர். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 10)

5. அவர்களின் இரகசியத்தையும், அந்தரங்க உரையாடலையும் மறைவான யாவற்றையும் அல்லாஹ் நன்கு அறிந்தவன் என்பது அவர்களுக்குத் தெரியாதா? (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 10)

6. அந்த நயவஞ்சகர்கள், முஸ்லிம்களுடன் (தபூக்) போரில் கலந்து கொள்ளாமல் பின்வாங்கிவிட்டனர். “கடுமையான வெப்பத்தில் புறப்படாதீர்கள்” என்று அவர்கள் மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டனர். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 11)

7. நபியே! “நரக நெருப்பு இன்னும் கடுமையான வெப்பமுடையது” என்று அவர்களிடம் கூறுவீராக! (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 11)

8. ஆதலால் அல்லாஹ் அவர்களை நபிகளார்களுடன் எந்த போரிலும் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை. (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 11)

9. அதேபோல், அந்த நயவஞ்சகர்களில் இறந்துவிட்ட யாருக்காகவும் ஜனாஸா - இறுதித் தொழுகை நடத்த நபிகளை அல்லாஹ் அனுமதிக்கவில்லை. (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 11)

10. பலகீனமானவர்கள், நோயாளிகள், போருக்கு செல்வதற்கான பணம் இல்லாதவர்கள் ஆகியோர்கள் போரில் கலந்து கொள்ள விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 12)

11. அத்தகையோர் அறப்போரில் கலந்து கொள்ள முடியவில்லையே என கண்ணீர் சிந்தினர். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 12)

---------------------------------------------